# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

தரம் - 4

இரண்டாம் தவணை

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

பாடத்திட்டம்

2022

முன் பிள்ளைப்பருவ பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை

தேசிய கல்வி நிறுவகம்

மகரகம

## நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.

நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2022 ஆம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக்கல்வி ஆண்டுக்கான அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு இரண்டாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியாவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியாவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் இரண்டாம் தவணைக்குரிய மிகவும் அத்தியாவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரண்டு மாற்றங்களை ஏற்படுத்தி வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவுப்படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவுப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் வீட்டில் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர் நிலைக்கும் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.

அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிரார்த்திப்போம்.

தரம் 4 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| குழுவாக உணவை தயார் செய்து மகிழ்வுடன் உணபார்.<br><br>உணவைத் தெரிவு செய்யும் போது முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வார். | 06. எமது உணவு | • சுகாதாரமான வாழ்க்கைக்கு, உரிய நேரத்தில் வேளை உணவுகளை உண்ண வேண்டுமென்ற விளக்கத்துடன் நடந்துகொள்வார்.<br>• தரமானதும் மருத்துவத்தன்மை கொண்டதுமான பான வகைகளை நுகரப் பழகுவார்.<br>• உணவு விரயமாகும் வழிகள் மற்றும் அவற்றை நீண்ட காலம் பேணும் முறைகள் பற்றிய விளக்கத்துடன் செயற்படுவார்.<br>• உணவு உண்ணும் மரபுகள் மற்றும் நற்பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் கைக்கொள்வார்.<br>• பாதுகாப்பற்ற உணவுகளை உட்கொள்வதனால் ஏற்படக்கூடிய நோய் நிலைமைகள் பற்றிய விளக்கத்துடன் சுத்தமான உணவுகளை உட்கொள்வார்.<br>• சரியான நடைமுறைகளைப் பின்பற்றி உணவைப் பரிமாறுவார் | • ஆரோக்கிய வளர்ச்சிக்குக் கலப்புணவின் இன்றியமையாமையை விளங்கிக் கொள்வார்.<br>• ஆரோக்கியமான வாழ்வுக்கு உதவும் மருத்துவத்தன்மை கொண்ட உணவு, பான வகைகளை இனங்கண்டு அவற்றை நுகர்வார்.<br>• உணவு வகைகள் அசுத்தமடையும் பல்வேறு முறைகளை இனங்கண்டு கூறுவார்.<br>• உணவை நீண்ட காலம் பேணக் கூடிய பல்வேறு முறைகளை இனங்காண்பார்.<br>• பாதுகாப்பற்ற உணவை உட்கொள்வதால் ஏற்படக்கூடிய நோய்கள் பற்றிய விளக்கத்துடன் அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளத்தக்க விதத்தில் நடந்து கொள்வார்.<br>• உணவைப் பரிமாறும்போது கடைப்பிடிக்க வேண்டிய சரியான நடைமுறைகளைக் கைக்கொள்வார். | 01-07 | 212-218 | 06 மணி |

தரம் 4 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| பாதுகாப்பு தொடர்பான குறியீடுகளை சரியாக இனங்கண்டு கவனமாக நடந்து கொள்வார். | 07. பாதுகாப்பும் கரிசனையும் | • விபத்துக்கள் நிகழத்தக்க வழிகள் பற்றிய அறிவூட்டத்துடன் அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.<br>• தொழில்நுட்பச் சாதனங்களையும் வெவ்வேறுபட்ட சக்திகளையும் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.<br>• தொற்று நோய்கள் மற்றும் தொற்றாத நோய்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகக் கையாளக்கூடிய சுகாதாரப் பாதுகாப்பு முறைகள் தொடர்பாக அறிவூட்டத்துடன் செயற்படுவார்.<br>• பாதுகாப்புத் தொடர்பான உணர்தன்மையுடன் ஆக்கங்கள் செய்வதில் ஈடுபடுவார். | • இயற்கைக் காரணங்களாலும் மனிதச் செயற்பாடுகள் காரணமாகவும் நிகழத்தக்க விபத்துக்களை இனங்கண்டு, அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.<br>• இனந்தெரியாத ஆட்களுடன் செயற்படும்போது பாதுகாப்பாகவும் கவனமாகவும் செயற்படுவார்.<br>• தொற்றுநோய்கள் மற்றும் தொற்றாத நோய்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகச் செய்யவேண்டியவை தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.<br>• பாதுகாப்பு மற்றும் கரிசனை தொடர்பாகக் கவனஞ்செலுத்தி, ஆக்க விளையாட்டுக்களில ஈடுபடுவார். | 01-08 | 222-228 | 06 மணி |

தரம் 4 -  சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| சூழல் வளங்களை பாதுகாப்பதற்கென பங்களிப்புச் செய்வார்.<br><br>திறந்த வெளியில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை கையாண்டு பார்த்தலின் அவதானிப்பு, பெறுபேறு ஆகியவற்றை தமது சொற்களில் எழுதுவார். | 08. நீர் | • நீருடன் பல்வேறுபட்டவை இடைத்தாக்கமடையும் விதத்தைக் கண்டறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• பல்வேறு வழிகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் நீரை வினைத்திறனாக முகாமை செய்து பாதுகாப்பாக நுகர்வார்.<br>• நீரினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள், விபத்துகள் தொடர்பாகக் கண்டறிந்து அவற்றைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.<br>• நீரின் தொழிற்பாடு தொடர்பான பல்வேறு ஆக்கங்களில் ஈடுபடுவார்.<br>• நீர் சார்ந்த பல்வேறு சந்தர்ப்பங்களை மகிழ்வுடன் சமர்ப்பிப்பார். | • நீரின் தன்மை வேறுபடும் விதத்தைக் கையாண்டு பார்ப்பார்.<br>• நீரின் தொழிற்பாட்டைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்<br>• அசுத்தமான நீரின் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்.<br>• நீர் சார்ந்ததாகத் தொழிற்படத்தக்க ஆக்கங்களில் ஈடுபடுவார்.<br>• நீரைப் பயன்படுத்திப் பல்வேறு ஒலிகளை எழுப்பக்கூடிய விதம் பற்றிய மகிழ்வான அனுபவங்களைப் பெறுவார். | 01-10 | 229-235 | 06 மணி |

தரம் 4 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| வரைபடத்தை அவதானித்து குறிப்பிட்ட இடங்களின் அமைவை விபரிப்பார். | 09. போக்குவரத்து | • வீதியில் பயணிப்போரினால் விதிமுறைகள், ஒழுக்கம் ஆகியனபற்றிய விளக்கத்துடன் வீதிகளைப் பயன்தரத்தக்க விதத்திலும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவார்.<br>• வாகனங்களால் ஏற்படுத்தப்படும் பாதகமான செல்வாக்குகளை ஆராய்ந்து அவற்றிலிருந்து பாதுகாப்பினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பார்.<br>• பொது வாகனங்களினால் மேற்கொள்ளப்படும் சேவைகளை மதிக்கவும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் பங்களிப்புச் செய்வார்.<br>• சேவையை வினைத்திறனாக மேற்கொள்வதற்குப் பல்வேறு வகைப்பட்ட பொறிமுறைச்சக்தியுடன் கூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படும் விதத்தை ஆராய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• போக்குவரத்துடன் தொடர்பான பல்வேறு சந்தர்ப்பங்களை ஒட்டிய ஆக்கங்கள் மேற்கொள்வார். | • பெருந்தெருக்களில் பயணிக்கும் போது வீதிச் சமிக்ஞைகளுக்குக் கட்டுப்பட்டு, கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளுக்கு ஏற்ப நடந்துகொள்வார்.<br>• பெருந்தெருவில் பயணிக்கும்போது வீதி விதிமுறைகளைப் பின்பற்றாமை காரணமாக ஏற்படக்கூடிய விபத்துக்களை இனங்கணடு, அவற்றிலிருந்து தவிர்த்துக்கொள்ளத் தேவையான படிமுறைகளைக் கூறுவார்.<br>• போக்குவரத்திற்கெனப் பயன்படுத்தும் வாகனங்கள் மற்றும் அவற்றின் பயன்கள் ஆகியவற்றைக் கூறுவார்.<br>• பொது வாகனங்களைப் பாதுகாப்பதற்குச் செய்யக்கூடியவற்றை விவரிப்பார்.<br>• போக்குவரத்தின் போதான நடத்தைகள் வெளிக்காட்டப்படக்கூடிய ஆக்கத்திறன்மிக்க விளையாட்டுக்களில் ஈடுபடுவார். | 01-06 | 236-241 | 07 மணி |

தரம் 4 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| செடியொன்றின் வளர்ச்சியை கவனமாக அவதானித்து இயற்கையின் நிலவுகைக்கு பங்களிப்புச் செய்வார். | 10. வீட்டுத் தோட்டம் | • திட்டமிட்ட வீட்டுத்தோட்டம் மூலம் தமது வீட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் பங்களிப்புச் செய்வார்.<br>• செய்கை பண்ணிய பயிர்களைப் பாதுகாப்பதற்காகக் கையாளும் உத்திகள் பற்றித் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• விவசாயத்துடன் இணைந்த பண்பாட்டுப் பெறுமானங்களை மதிப்பார்.<br>• வீட்டுத்தோட்டத்திலிருந்து பெறக்கூடிய பொருள்களைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார். | • பயிர்களை முளைக்க வைக்கும் வெவ்வேறு முறைகள் தொடர்பான அனுபவங்களைப் பெறுவார்.<br>• வீட்டுத்தோட்டத்தை அழகுபடுத்தும் செயற்பாடுகளில் கூட்டாகப் பங்குபற்றுவார்.<br>• செய்கைபண்ணிய பயிர்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை இனங்கண்டு கூறுவார்.<br>• பயிர்களைப் பாதுகாக்கும் பாரம்பரியமான உத்திகளைக் கையாண்டுபார்ப்பார்.<br>• நவீன உத்திகள், பயிர்ச்செய்கைப் பாதுகாப்புமீது பங்களிக்கும் விதத்தைத் தேடியாய்வார்.<br>• இரசாயனப் பசளைகளையும் பூச்சிகொல்லிகளையும் பயன்படுத்துவதால் இயற்கைச் சூழலில் ஏற்படும் பாதிப்புகளை இனங்கண்டு கூறுவார்.<br>• வெவ்வேறு பொருள்களைக் கொண்டு வீட்டுத்தோட்டத்தில் அழகை எடுத்துக்காட்டும் ஆக்கங்கள் செய்வார்.<br>• வீட்டுத்தோட்டத்திலிருந்து பெற்ற ஓர் உணவுப் பொருளைக் கொண்டு உணவு தயாரித்துக் கூட்டாக நுகர்வார். | 01-06 | 241-246 | 07 மணி |

தரம் 4 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| பிரச்சினையொன்றை தீர்ப்பதற்கான மாற்று முறைகளை பிரயோகிப்பார். | வேலையை இலகுபடுத்திக் கொளள்ளும் வழிகள் - 11 | • வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதறகாகத் தற்காலத்தில் கையாளப்படும் உத்திகளையும் முற்காலத்தில் கையாளப்பட்ட உத்திகளையும் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகவும் நேர்த்தியாகச் செய்துமுடிப்பதற்காகவும் திட்டமிட்டு, ஒழுங்காகவும் சீராகவும் வேலை செய்யப் பழகுவார்.<br>• கூட்டாகச் சேர்ந்து செயற்படுவதன் மூலம் வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளச் செயற்படுவார். | • வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக முற்காலத்தில் கையாளப்பட்ட சில உத்திகளைக் குறிப்பிடுவார்.<br>• இழுத்தலையும் தள்ளுதலையும் இலகுபடுத்திக் கொள்ளக்கூடிய முறைகளை நடைமுறையில் கையாண்டு பார்ப்பார்.<br>• திட்டமிட்டு, ஒழுங்காக, சீராகச் செயற்பட்டு, வேலைகளை இலகுபடுத்திக் கொள்வார்.<br>• எவரேனும் ஒருவரிடம் அல்லது யாதேனும் நிலையத்திலிருந்து சேவைகளைப் பெறும் வேளைகளிலும் எவரேனும் ஒருவருக்கு அல்லது யாதேனும் நிலையத்திற்குச் சேவைகளை வழங்கும் போது மரியாதையாகவும் சட்டத்தை மதித்து நடக்கும் நடத்தையைக் காட்டுவார்.<br>• யாதேனும் வேலையைச் செய்யும்போது எளிய பொறிகளைப் பயன்படுத்தி வேலைகளை இலகுபடுத்திக் கொள்வார். | 03<br><br><br>05 06<br><br>01<br><br>02<br><br>03<br><br>06<br><br>04<br><br>05 | 163<br><br><br><br><br>163<br>164<br><br>164<br>165 | 07 மணி |

தரம் 4 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | | • சேவைகளைப் பெறும் மற்றும் வழங்கும் போது மரியாதையாகவும் சட்டங்களை மதித்தும் செயற்படுவார்.<br>• மின்சாரம், காந்தம் மற்றும் எளிய பொறிகளைப் பயன்படுத்தி வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகளைக் கூர்ந்து நோக்கி அறிக்கைப்படுத்துவார்.<br>• ஒத்துழைப்பு மற்றும் கூட்டுணர்வு மூலம் வெற்றியை அனுபவிக்கத்தக்க விளையாட்டுக்களில் ஈடுபடுவார். | • காந்தம் ஒன்றின் இயல்புகளைச் செய்முறைச் செயற்பாடுகளாகப் பொருத்தமானவாறு பயன்படுத்துவார்.<br>• எளிமையான மின்சுற்றுக்களின் செயற்பாட்டைக் கையாண்டு பார்ப்பார்.<br>• ஒத்துழைத்துச் செயற்படுவதால் வெற்றியை அனுபவிக்கக்கூடிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார். | 01-06 | 248-253 | |

மொத்த மணித்தியாலங்கள் 39 மணித்தியாலங்கள்